**பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி - 2023**

-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அதிகார சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல் மற்றும் அதன் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு வீச்சு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பேரவைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது

முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- கூட்டுத்தாபனத்தின் சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனத்தின் இணங்கியிருந்ததா என்பதும்,
- கூட்டுத்தாபனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீது கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| பொருத்தமான நியமத்துடன் தொடர்புடைய இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 48 ஆம் பிரிவின் பிரகாரம் வருமானமும் செலவும் எதிரீடு செய்யப்படக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், வெளிநாட்டு பயணத்திற்காக ஏற்பட்ட செலவு ரூபா 21,318,750 தொகையினை கற்கைநெறி கட்டண வருமானமாக பெற்ற ரூபா 151,847,248 தொகையுடன் எதிரீடு செய்து ரூபா 130,528,497 தொகையினை மாத்திரம் வருமானமாக கணக்கிடப்பட்டுள்ளது. | வெளிநாட்டு கற்கைநெறி கட்டணத்திலிருந்து பெற்ற வருமானம் ரூபா 130,528,497 ஆகும். ரூபா 21,318,750 தொகையானது வெளிநாட்டு பயணத்துடன் தொடர்புடைய மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு செலுத்து வேண்டிய செலவுகளுடன் தொடர்பானதாகும். இது ஒரு வருமானமில்லை. ஆனால், வெளிநாட்டு மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு பயண பங்குபற்றுதலுக்காக இந்த தொகையினை செலுத்த வேண்டும். வெளிநாட்டு பயணத்துடன் தொடர்புபட்ட பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளினை ஏனைய வருமான கணக்கிற்கு ஒதுக்கீடு செய்யப்படும். இறுதி விளைவு பூச்சியமாவதோடு, இது ஏனைய வருமானக் கணக்கின் மீதியில் | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்குகள் பேணப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எவ்வித தாக்கத்தினையும் செலுத்தாது. எதிர்காலத்தில் வெளிநாட்டு பயணத்துடன் தொடர்புபட்ட பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளினை வெவ்வேறு கணக்குகளில் கணக்கிடப்படும். | |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஏற்பாட்டு கணக்குகளில் 2023 ஆம் ஆண்டிற்கான அட்டுறு பராமரிப்பு செலவினமாக ரூபா 1,439,784 தொகையினை ஒதுக்கீடு செய்யத் தவறியமையினால் 2023 ஆம் ஆண்டிற்கான மிகையானது அந்த தொகையினால் உயர்த்திக் காட்டப்பட்டுள்ளது. | இந்த பராமரிப்பு செலவினமானது நூலக கட்டிடத்தில் ஏற்பட்ட நீர்க் கசிவை திருத்துவதுடன் தொடர்புடையதாகும். இது மீளசெலுத்தக்கூடிய வைப்பு பணத்திணைக் கொண்டு ஈடுசெய்யப்பட வேண்டியிருந்தது. அதன் காரணமாக அட்டுறு செலவினத்தில் இவைகள் உள்ளடக்கப்படவில்லை. எதிர்காலத்தில் மீள்செலுத்தக்கூடிய வைப்பு பணத்திலிருந்து செலுத்த வேண்டிய செலவுகளினை மீள்செலுத்தக்கூடிய வைப்பு ஒதுக்கத்திலிருந்து கழிக்கப்படும் என்பதோடு அட்டுறு செலவினங்களும் இதற்கமைய சீரமைக்கப்படும். | ஆண்டிற்கான அட்டுறு செலவினங்கள் இனங்காணப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். |
| (ஆ)கல்லூரியில் ரூபா 2,982,560 தொகையான டோனர்ஸ் மற்றும் கார்ட்ரிட்ஜஸ் (toners and cartridges) ஆனது இறுதி இருப்பிலிருந்து விடுபட்டுள்ளதுடன், ரூபா 1,377,165 தொகையினால் எழுதுகருவி இருப்பு உயர்த்திக்காட்டப்பட்டுள்ளது. அதன் விளைவாக, ஆண்டிற்கான இறுதி இருப்பு ரூபா 1,605,395 தொகையினால் குறைத்துக்காட்டப்பட்டதனால் அதே தொகையினால் மிகையினை குறைத்து மதிப்பிட வழிவகுத்தது. | எழுதுகருவியின் இறுதி இருப்பு சுயாதீன குழு ஒன்றினால் கணிப்பீடு செய்யப்பட்டதுடன், செயன்முறையின் போது ஏற்பட்ட தாமதப் பிழை காரணமாக எழுதுகருவியின் இறுதி இருப்பில் வேறுபாடு காணப்பட்டது. கணக்காய்வு அவதானிப்பிற்கு அமைவாக எழுதுகருவி இருப்பில் ஏற்பட்ட வேறுபாட்டினை நாட்குறிப்பேட்டு பதிவினை பயன்படுத்தி 2024 ஆம் ஆண்டில் திருத்தப்படும். | இருப்புக் கணிப்பீடு மற்றும் கணக்கீடு என்பன துல்லியமாக செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 பொருத்தமற்ற மதிப்பீடு அல்லது கணிப்பீடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 223,585,636 கிரயமான சொத்துக்களின் கொண்டு செல்லும் பெறுமதி பூச்சியமாகியது. ஆனால் நிறுவனத்தினால் இந்த சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. எனினும், இந்த சொத்துக்களினை மீள்மதிப்பீடு செய்வதற்கும், கணிப்பீடு | கொண்டு செல்லும் மீதியானது பூச்சியமாகவுள்ள சொத்துக்கள் எதிர்காலத்தில் இனங்காணப்பட்டு மீள் மதிப்பீடு செய்யப்படும். | நிதிக் கூற்றுக்களில் சொத்துக்களின் சரியான பெறுமதி வெளிப்படுத்தப்பட வேண்டும். |

செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 117,304,421 தொகை மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகையாக ரூபா 86,736,631 தொகை காணப்பட்டது. ஆகையால், நிதி விளைவில் ரூபா 30,567,790 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 12,808,187 தொகையினால் செயற்பாட்டு செலவு அதிகரித்தத்தினை விட அதனோடு தொடர்பான வருமான அதிகரிப்பு விஞ்சியமை, ரூபா 26,368,377 தொகையினால் திறைசேரியிடமிருந்து கிடைத்த காசுப் பெறுவனவுகள் அதிகரித்தமை, அதே போன்று ரூபா 49,764,778 தொகையினால் எதிர்மறையான வெளிநாட்டு நாணயமாற்று கணக்கு அதிகரித்தமை, மற்றும் ரூபா 57,548,497 தொகையினால் வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து கிடைத்த வருமானம் அதிகரித்தமை போன்ற விடயங்களே இம்முன்னேற்றத்துக்கான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 ஏனைய நிறுவனங்களின் வளங்களினை பயன்படுத்தல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹேய்யன்துடுவ இளைஞர் சேவைகள் பேரவைக்கு சொந்தமான 11 ஏக்கர் பரப்பைக்கொண்ட நிலம் பயன்படுத்தப்பட்டு வந்ததுடன் அறிக்கையிடும் திகதியான திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அதன் சட்டபூர்வ உரிமை கைமாறப்படவில்லை. மேலும், அறிக்கையிடும் ஆண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 1,263,734,910 பெறுமதியான தேறிய கட்டிடமானது அந்த நிலத்தில் அமையப்பட்டுள்ள கட்டிடத்தின் பெறுமதியினை உள்ளடக்குகின்றது. எனினும் இந்த பெறுமதியினை தனித்தனியாக கணிப்பிடவில்லை. | தேசிய இளைஞர் சேவைகள் பேரவைக்கு சொந்தமான ஹேய்யந்துடுவ நிலத்திலிருந்து 11 ஏக்கர், 0 ரூட்ஸ் மற்றும் 10 பேர்சஸ் நிலத்தினை நிதிக் கொடுப்பனவு இன்றி பாதுகாப்பு அமைச்சின் பயன்பாட்டிற்காக மாற்றப்படுவது சிறந்ததாகும் என 2023 ஒக்டோபர் 13 ஆம் திகதிய MOD/DEF/DSCSC/ADM/9 ஆம் கடிதத்தின் ஊடாக, பாதுகாப்பு அமைச்சினால் இந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டது. தனிநபர்களுக்கு சொந்தமான நிலத்தினை நிதி இழப்பீடு இன்றி மாற்ற முடியாது என்று 2024 ஜனவரி 14 ஆம் திகதிய 15/6/DE/GAM/50 ஆம் கடிதத்தில் நில சீர்திருத்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது. கல்லூரியின் பிரதிநிதிகள் மற்றும் நில சீர்திருத்த ஆணைக்குழுக்கிடையில் கூட்டமொன்று நடத்தப்பட வேண்டும் என்றும் கலந்துரையாடலின் அறிக்கையினை பாதுகாப்பு பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலத்தின் சட்டபூர்வ உரிமையினை பெற்றுக்கொள்ள வேண்டும். |